**O.S. No.43/2011**

**Date:27/08/2019**

**வா.சா-1 திரு.மகேந்திரன், த.பெ.கருப்பணன்.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

26.07.2010 தேதியிட்ட பெரியபுலியன் மற்றும் 11 நபர்கள் பெயரில் உள்ள சிட்டா சான்றிட்ட கணிணி நகல் வா.சா.ஆ.1. (11 நபர்கள் பெயர் இல்லை என்று மேற்படி ஆவணம் குறியீடு செய்வதற்கு 2-ம் பிரதிவாதி தரப்பின் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) 26.07.2010 தேதியிட்ட அருள்மிகு பெரியபுலிய அய்யனார் சின்னபுலிய அய்யனார் கோவில் காப்பாளர் பெயரில் உள்ள சிட்டா சான்றிட்ட கணிணி நகல் வா.சா.ஆ.2. (மேற்படி அருள்மிகு பெரியபுலிய அய்யனார் சின்னபுலிய அய்யனார் கோவிலின் பிரதிநிதி வா.சா.1 என்பதற்கு எந்த குறியீடும் மேற்படி ஆவணத்தில் இல்லை என்று 2-ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு மேற்படி ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) 28.07.2010 தேதியிட்ட வல்லாளப்பட்டி தெற்குவளவு தற்காலிக டிரஸ்டி காப்பாளர் பெயரில் உள்ள சிட்டா சான்றிட்ட கணிணி நகல் வா.சா.ஆ.3. (மேற்படி ஆவணத்தில் வல்லாளப்பட்டி தெற்குவளவு தற்காலிக டிரஸ்டி காப்பாளர் வா.சா.1 தான் என்று குறிப்பு இல்லாததால் மேற்படி ஆவணத்தின் 2-ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு மேற்படி ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) 28.07.2010 தேதியிட்ட பொ.பெரியபுலியன், சின்னபுலியன் தொ.சி,பெரியபுலியன் சி,மலையாண்டி அம்பலம் ம.க ஆகியோரின் பெயரில் உள்ள சிட்டா கணிணி சான்றிட்ட நகல் வா.சா.ஆ4. (மேற்படி ஆவணத்தில் வா.சா.1-ன் பெயர் இல்லை என்று தெரிவிக்கப்பட்டும், 2-ம் பிரதிவாதி பெயரிலும் உள்ள ஆவணம் என்று தெரிவிக்கப்பட்டும், 2-ம் பிரதிவாதி தரப்பின் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) 26.07.2010 தேதியிட்ட வெள்ளையம்மாள் என்பவரின் பெயரில் உள்ள சிட்டா கணிணி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. மேற்படி ஆவணத்தில் வா.சா.1-ன் பெயர் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு, 2-ம் பிரதிவாதி தரப்பின் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) 28.07.2010 தேதியிட்ட அருள்மிகு தெற்குவளவு மந்தைகருப்பணசாமி காப்பாளர் பெயரில் உள்ள சிட்டா கணிணி சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.6. (அருள்மிகு தெற்குவளவு மந்தைகருப்பணசாமி காப்பாளர் வா.சா.1 தான் என்று மேற்படி ஆவணத்தில் எந்த குறிப்பும் இல்லை என்று 2-ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, மேற்படி ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) 31.07.2010 தேதியில் வா.சா.1 மற்றும் சிலர் 2-ம் பிரதிவாதி மற்றும் 4-ம் பிரதிவாதி மீது மேலூர் வட்டாட்சியருக்கு கொடுத்த புகார் மனு அலுவலக நகல் வா.சா.ஆ.7. (மேற்படி ஆவணத்தில் தேதி மட்டும் மையினால் தனியாக எழுதப்பட்டதாக 2-ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, மேற்படி ஆட்சேபனைக்கு உட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது) (வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வா.சா.1-ன் முதல் விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகறது)